# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 673/2016/பேரூ

ஆணை எண்: 070/2017

நாள்: 21/04/2017

திரு. க. வேடன் (பழக்கடை)
த/பெ. கந்தன்,
5/22/4, தெற்குத் தெரு, 5வது வார்டு,
அச்சம்பட்டி, காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம் - 626 106.
– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
காரியாப்பட்டி பேரூராட்சி,
காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம் - 626 106.
– எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. க. வேடன் என்பவரின் 07.03.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0673/TPT/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

1. விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டியைச் சேர்ந்த திரு. க. வேடன் என்பவர் 07.03.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் அடியில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களை தெரிவித்துள்ளார்:-

மனுதாரர் காரியாப்பட்டி பேரூராட்சி பஸ் நிலையம் அருகில் தள்ளுவண்டியில் பழ வியாபாரம் செய்து வருவதாகவும், பஸ் நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளில் ஒன்றினை வாடகைக்கு எடுக்க, பொது ஏல விபரம் குறித்து பேரூராட்சி அலுவலகத்தில் கேட்ட போது ரூ.5 இலட்சம் வீதம் பெறப்பட்டு கடைகள் வாடகைக்கு விடப்போவதாகவும், மாடியில் கடைகள் கட்டப்படும் போது அதற்குரிய பணத்தை கட்டிவிட்டு அதன்படி ஒரு கடையை பெற்றுக் கொள்ளலாம் என்று அப்போதைய செயல் அலுவலர் மற்றும் சேர்மேன் ஆகியோர் கூறினார்கள் என்றும், பிறகு விசாரித்ததில் மூன்றாம் நபர்களிடம் லஞ்சமாக தலா ரூ.5 இலட்சம் பெற்றுக் கொண்டு பொது ஏலம் நடத்தாமல் ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் குத்தகை புதுப்பிப்பு என்ற பெயரில் மிரட்டி பணம் பறித்தும், மீண்டும் ஏலம் விடுவதாக மிரட்டியும் வரும் தற்போதைய சேர்மேன், முன்னாள் சேர்மன், கவுன்சிலர்கள், செயல் அலுவலர்கள் மீது விசாரணை செய்திட கேட்டுள்ளார். மேற்கண்ட முறைகேடுகள் குறித்த விசாரணையின் போது தன்னிடம் உள்ள ஆதாரங்களை சமர்ப்பிப்பதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணை எண்.673/TPT/2016 நாள்: 30.11.2016 வாயிலாக மேற்படி முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. அதன்படி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.43/2016/நாள்:27.12.2016 பெறப்பட்ட விளக்க அறிக்கையில் செயல் அலுவலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் உட்புறம் புதிய வணிக வளாக கடைகள் கட்டப்பட்டுள்ளதில் பேரூராட்சி நிர்வாகத்தினரால் முறைகேடுகள் நடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள வணிக வளாக கடைகளில் வரிசை எண்.1 முதல் 18 முடிய உள்ள கடைகள் பேரூராட்சி நிர்வாகம் மூலம் கடந்த 16.12.2009 அன்று பொது ஏலம் விடப்பட்டது என்றும் மேற்படி கடைகளில் அதிக தொகைக்கு ஏலம் எடுத்தவர்களுக்கு கடைகள் வாடகைக்கு விடப்பட்டது என்றும் இந்நிலையில் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் இதே கடைகளின் மாடியில் கடைகள் கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டு 15 கடைகள் கட்டப்பட்டதாகவும் மேற்படி கடைகள் கடந்த 14.06.2013 அன்று பொது ஏலம் விடப்பட்டது என்றும், ஏலம் விடப்பட்டதில் முறைகேடுகள் ஏதும் இல்லை என்றும் கடைகள் ஏலம் விடப்பட்டதில் கலந்து கொண்ட நபர்கள் மாத வாடகை அடிப்படையில் அதிக தொகைக்கு ஏலம் எடுத்துள்ளவர்களுக்கு ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து கடை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதாகவும் வரிசை எண்.1 முதல் 5 மற்றும், 12, 134 ஆகிய கடைகள் ஏற்கனவே கடை வைத்திருந்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏலம் நடைபெறுவது குறித்த விளம்பர அழைப்பாணை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் மூலம் தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டதாகவும். மேலும், பேரூராட்சி பகுதிகளில் தண்டோரா மூலம் அறிவிப்பு செய்யப்பட்டும், மைக் விளம்பரம் செய்யப்பட்டும் பொது ஏலம் விடப்பட்டதாகவும் மனுதாரரால் கூறப்படும் முறைகேடுகள் குறித்த புகார்களில் உண்மை ஏதும் இல்லை என்ற விபரத்தையும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.673/TPT/2016 நாள்: 30.11.2016ல் இம்முறைமன்ற நடுவ அலுவலகத்தில் 05.01.2017 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் அழைக்கப்பட்டார். மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனினும் மீண்டும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளித்து 20.3.2017 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு அழைக்கப்பட்டார். மீண்டும் விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை.

மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.673/TPT/2016 நாள்:02.02.2017 வாயிலாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது செயல் அலுவலர் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

> *"உதவி இயக்குநர் அவருக்கு இது போன்று புகார் மனுக்கள் பெறப்பட்டு விசாரணை செய்தார் விசாரணையின் பொழுது மனுதாரர் தான் அந்த புகார் மனுவை அனுப்பவில்லை என்று சொல்லியிருக்கிறார். அவர் தள்ளுவண்டியில் பழ வியாபாரம் செய்கிறவர். கடைகள் அனைத்தும் முறையாக விளம்பரம் செய்யப்பட்டு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. 2013 ல் ஏலம் விடப்பட்டுள்ளது. அதன் பிறகு 3 ஆண்டு இடைவெளியில் அவர்களுக்கு புதுப்பிக்கப்படும். ஏலம் அனைத்தும் சம்பந்தப்பட்ட கோப்புகளை பரிசீலித்துப்பார்க்கையில் முறையாக ஒப்பந்தம் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மனுவில் ஒரே ஆளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் கொடுக்கப்பட்டுள்ளதாக வந்தவருக்கு அதிக தொகைக்கு ஏலம் கேட்டவர்களுக்கே கடைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மனுவில் குறிப்பிட்டவர் புகார் பொய்யானது. வணிக வளாக கடைகள் மொத்தம் 232 கடைகள் ஆகும்."* என்று குறிப்பிட்டுள்ளார்.

முறையீட்டு மனு, தொடர்புடைய ஆவணங்கள், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டதில், பேரூராட்சி உதவி இயக்குநர் விசாரணை மற்றும் செயல் அலுவலர் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக கடைகள், அனைத்தும் முறையாக விளம்பரம் செய்யப்பட்டு ஏலம் விடப்பட்டுள்ளதாகவும், மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், அதிக தொகைக்கு

ஏலம் கேட்பவர்களுக்கே கடை ஏலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது எனினும் மனுதாரருக்கு இருமுறை வாய்ப்பளித்தும் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையிலும் விசாரணைக்கு ஆஜராகாததாலும் செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஏற்கப்பட்டு புகார் மனுவினை நிராகரிக்கலாம் என முடிவு செய்து இம்முறைமன்றம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. திரு. க. வேடன் (பழக்கடை)
   த/பெ. திரு. கந்தன்,
   5/22/4, தெற்குத் தெரு, 5வது வார்டு,
   அச்சம்பட்டி, காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம் - 626 106.

2. செயல் அலுவலர்,
   காரியாப்பட்டி பேரூராட்சி,
   காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம் - 626 106.